JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

Crl.M.P. No.621/2026 Date:11.08.2026

| | |
|---|---|
| பெயர் | திரு. மகேஷ்வரன் |
| கணவர் பெயர் | திரு.ஆறுமுகம் |
| முகவரி | எண். 5 & 7 கங்காபார்க் 200 அடி சாலை, கொரட்டூர், சென்னை |
| கிராமம் | |
| மாவட்டம் | |
| ஜாதி | |
| தொழில் | |
| மதம் | |
| வயது | 37/2026 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 11th day of August 2026.

**சத்தியபிரமாண வாக்குமூலம்:**

நான் இந்த வழக்கின் மனுதாரர் ஆவேன். நான் மேற்கண்ட முகவரியில் Blue Star Cultural Association Club நடந்தி வருகிறேன். இந்த கிளப் வாகனங்களை பார்க்கிங் செய்வதற்காக கடந்த 06.08.2025 தேதி சென்னையில் எண்.1 கங்காபார்க் 200 அடி சாலை, கொரட்டுரில் பார்க்கிக்காக இந்த இடத்தின் உரிமையாளர் திரு. சிரஞ்சீவி ராஜுவிடம் அட்வான்ஸ் ரூ.50,000/− பார்க்கிக் மாத வாடகையாக ரூ.15000./− செலுத்த ஒப்பந்தம் செய்தேன். நான் ஒப்பந்தம் போடும் போது அந்த இடம் காலி இடமாகதான் இருந்தது. நான் ரூ.10 லட்சம் செலவு செய்து அந்த இடத்தை சுற்றி ஷெட் அமைத்தேன் மற்றும் தண்ணீர்காக போர்வெல் போட்டேன் மற்றம் வாகனங்கள் நிறுத்துவதற்கு 15x40 ச.அடியில் ஷெட்கூரை அமைத்து பராமரிப்பு பணிகளை மேற்கொண்டேன். மாத வாடகையாக ரூ.15000/− ஆக 2026 ஜனவரி மாதம் வரை வாடகையை முறையாக செலுத்தி வந்தேன். அதன் பின்பு இடத்தின் உரிமையாளர் திரு. சிரஞ்சீவி ராஜு வெளிநாடு சென்று விட்டார். இந்த கால கட்டத்தில் நான் வாடகை செலுத்தவில்லை. அதன் பின்பு திரு. சிரஞ்சீவி ராஜு கடந்த 27.03.2026 அன்று இரவு நான் ஒப்பந்தம் செய்த பார்க்கிங் இடத்தின் கேட்டை உடைத்து தரைமட்டமாகிவிட்டார். இந்த இடத்தை காலி செய்யுமாறு நான் வேலைக்கு வைத்த பணியாளரிடம் கூறியிருக்கிறார். அதன் பின்பு 28.03.2026 நான் விஷயம் தெரிந்து பார்க்கிங் இடத்திற்கு சென்று பார்த்த போது என்னுடைய பொருட்கள் எல்லாம் உடைந்திருந்தது.

சிரஞ்சீவி ராஜுவின் மகளிடம் ஏன் இப்படி சொல்கிறீர்கள் திடீரென்று இடத்தை காலி பன்னா சொன்னால் நான் எப்படி செல்ல முடியும், நான் பார்க்கிக்காக ரூ.10 லட்சத்திற்கு மேல் செலவு செய்திருக்கிறேன் என்று சொன்னேன். அதற்கு திரு. சிரஞ்சீவி ராஜுவின் மகள் உங்கள் பொருட்களை எல்லாம் தலையில் வைத்துக்கொண்டு காலி செய்து செல்லுங்கள் என்று கோபமாக கூறினார். அதன் பின்பு நான் காவல் கட்டுப்பாட்டு அறை எண்.100 க்கு புகார் கொடுத்தேன். அதன் பின்பு டி3 கொரட்டூர் காவல் நிலையத்தில் இருந்து ஒரு காவல் உதவி ஆய்வாளர் மற்றும் 2 காவலர்கள் வந்தார்கள். போலீஸ்காரர்கள் சமாதானம் முயற்சி செய்தார்கள். ஆனால் அவர்கள் சமாதானம் ஆகவில்லை என்பதால் காவல் உதவி ஆய்வாளர் காவல் நிலையம் வந்து புகார் அளிக்குமாறு கூறினார். நான் காவல் நிலையம் சென்று புகார் அளித்த போது காவலர்கள் இடத்தின் உரிமையாளருக்கு சாதகமாகவே பேசினார்கள். இதனால் எனக்கு மன உளைச்சல் ஏற்பட்டு வருமானம் இல்லாமல் இருந்து வருகிறேன். எனவே இடத்தின் உரிமையாளர் மீது தக்க நடவடிக்கை எடுத்து உத்தரவு பிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Judicial Magistrate,
Ambattur